**ONE TWO ACADEMY**

## 10 - ஆம் வகுப்பு

## தமிழ்

### இயல் - 1

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

**I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **10 x 1 = 10**

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2. ஐம்பெருங்காப்பியங்களுள் பொருந்தாததைத் தேர்க.

அ) யசோதர காவியம் ஆ) சிலப்பதிகாரம்

இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி

3. கடல் தரும் சங்குகளின் வகைகள் எத்தனை?

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து

4. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது எது?

அ) இரட்டுறமொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி

இ) உவமை அணி ஈ) உருவக அணி

5. எழில் முதல்வனின் சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்

அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்

இ) யாதுமாகி நின்றாய் ஈ) எங்கெங்கு காணினும்

6. முதல் தமிழ்க்கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு

அ) 1983 ஆ) 1938

இ) 1893 ஈ) 1980

7. சொல் திரிந்து அளபெடுப்பது என்பது யாது?

அ) செய்யுளிசை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) எதுவுமில்லை

8. ‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’ - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

9. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?

அ) பாவாணர் ஆ) கால்டுவெல்

இ) இரா. இளங்குமரனார் ஈ) திரு.வி.க

10. முத்தினையும் அமிழ்தினையும் தருவதாகச் சந்தக்கவிமணி தமிழழகனார் குறிப்பிடுவது எதை?

அ) மூங்கில் ஆ) கடல்

இ) மழை ஈ) தேவர்கள்

## II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 8 X 2 = 16

11. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

12. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் யாவை?

13. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?

14. **கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

(குவியல், குலை, மந்தை, கட்டு)

15. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**

“தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை

தேரும் சிலப்பதி காறமதை

ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்

ஓதி யுனர்ந்தின் புருவோமே” - கவிமணி தேசிக விநாயகனார்.

16. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

17. **கலைச்சொல் அறிவோம்:**

அ) Vowel – ஆ) Monolingual –

18. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

19. **மொழிபெயர்ப்பு:**

If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. – Nelson Mandela

20. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

22. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

23. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

25. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26. ‘சான்றோர் வளர்த்த தமிழ்’ என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

27. **நயம் பாராட்டுக.**

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியேss
மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே - கா. நமச்சிவாயர்